Judicial Form No.53

(See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 158/2020 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW4 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | – | நாகராஜ், சிறப்பு உதவி ஆய்வாளர் |
| Father's Name | – | காளியப்பன் |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 13th March 2026.

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

Accused absent. 317 Petition filed and allowed. Accused counsel present.

**முதல் விசாரணை :**

நான் தற்போது பொள்ளாச்சி தாலுாக்கா காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். மேற்படி காவல்நிலையத்தில் பணியாற்றிய உதவி ஆய்வாளர் திரு. ராஜேந்திரன் அவர்களின் கையெழுத்து மற்றும் கையொப்பம் எனக்கு நன்கு தெரியும். நான் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியமளிக்கிறேன்.

கடந்த 27.02.2020 ம் தேதி மேற்படி காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளர் அவர்கள் நிலைய பொறுப்பில் இருந்தபோது, தண்டபாணி மகன் அருண் பிரகாஷ் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரினை பெற்று நிலையக்குற்ற எண்.29/2020, சட்டப்பிரிவுகள் 294(பி), 323, 506(1) இதசவின் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார். அந்த புகார் **அ.சா.ஆ.3** மற்றும் முதல் தகவலறிக்கை **அ.சா.ஆ.4** ஆகும். பின்னர் வாதியின் புகாரை இணைத்து முதல் தகவலறிக்கையின் அசலை கனம் நீதித்துறை நடுவர் எண்.2, பொள்ளாச்சிக்கும் இதர நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்துள்ளார்.

பின்னர் அன்றைய தினமே மாலை 18.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் கணேஷ் கார்த்திக் மற்றும் கார்த்திகேயன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். அவைகள் முறையே பார்வை மகஜர் **அ.சா.ஆ.5**, மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.6** ஆகும். பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 7 வரையிலானவர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

பின்னர் வழக்கின் எதிரியை தேடி ஆத்துப்பொள்ளாச்சி, சாத்துப்பாறை, சித்துார், திம்மங்குத்து, இராமபட்டிணம் பிரிவு ஆகிய இடங்களில் தேடி வந்தநிலையில் கிடைத்த தகவலின்பேரில் ராமபட்டிணம் பிரிவு அருகே நின்றிருந்த எதிரியை 16.45 மணிக்கு தகவலாளி அடையாளம் காட்ட அதே இடத்தில் வைத்து காரணம் கூறி கைது செய்தும், 17.15 மணிக்கு நிலையம் வந்து எதிரியை திரேக பரிசோதனை செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார். பின்னர் இத்துடன் அவரது புலன் விசாரணையை முடித்து எதிரிக்கெதிராக மேற்படி பிரிவுகளின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சொன்ன நேரத்தில் சொன்ன சமயத்தில் புகார் பெறப்பட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றும், பார்வை மகஜர், மாதிரி வரைபடம் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்றும் சம்பவ இடத்திற்கே போகாமல் சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரியின் மீது தவறுதலாக குற்ற அறிக்கை தாக்கல் செய்துள்ளது என்றாலும், எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை** - இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

**(Sd/-. Thiru. E. Pragasam BA.,BL.,)**

Judicial Magistrate No.II,
Pollachi